Registered as a Newspaper
பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 27

சனிக்கிழமை
23 டிசெம்பர் 2023

மார்கழி 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"நல்ல மாட்டுக்கு ஒரு சூடு. ஆனால் எங்கட ஆக்கள் பட்டும் திருந்தாமல் ஏமாறத்தான் நிக்கினம் பாருங்கோ"



## தீவிர தேடுதல் எதிரொலி
# குற்றச்செயல்கள் யாழில் கட்டுக்குள்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 23

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதைப் பொருள் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பொலிஸாரால் தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில், கடந்த சில நாள்களில் குற்றச்செயல்களின் எண்ணிக்கை சடுதியாகக் குறைந்துள்ளது என்று யாழ்ப் பாணப் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விஷாந்த தெரிவித்தார்.**

☞ 11

## 2024 இலும் 'எல் - நினோ'
### உலக வானிலை அமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 23
எல்-நினோவின் தாக்கம் இந்த வருடம் பெரும் பாதிப்புகளையும் பின்னடைவுகளையும் ஏற்படுத்தியுள்ள நிலையில், அடுத்த வருடமும் எல் - நினோ ஆண்டாக இருக்கும் என்றும்

☞ 11

## இலங்கைக்குள் கொரோனா திரிபு!

கொழும்பு, டிசெ. 23
இந்தியாவின் கேரள மாநிலத்திலும், உலகின் பல பகுதிகளிலும் தற்போது துரிதமாகப் பரவிவரும் ஜே.என். கொரோனாத் திரிபு இலங்கைக்

☞ 11

## போதைக் கட்டுப்பாடு;
# 2,008 பேர் கைதாகினர்

கொழும்பு, டிசெ. 23
போதைப்பொருளைக் கட்டுப்படுத்துவதற்காக நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட ஆயிரத்து 996 சுற்றிவளைப்புகளில் 2 ஆயிரத்து 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கடந்த 17ஆம் திகதி முதல் 'யுக்திய ஒப்பரேஷன்' என்ற பெயரில் நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. 17ஆம் திகதி முதல் நேற்றுமுன்தினம் வரை 8 ஆயிரத்து 689 சுற்றிவளைப்புகள் இடம்பெற்றுள்ளன. 8 ஆயிரத்து 591 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 353 பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## போலி துவாரகா வீடியோ; வெளியிட்டோர் கைதாவர்
### அமைச்சர் அலஸ் எச்சரிக்கை



கொழும்பு, டிசெ. 23
பிரபாகரனின் மகள் உரையாற்றுவது போல் வீடியோ தயாரித்து வெளியிடப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன. இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் நிச்சயம் கைது செய்யப்படுவார்கள் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.
மாவீரர் தினத்தன்று பிரபாகரனின் மகள் எனத் தன்னை அடையாளப்படுத்திய பெண்ணொருவர் உரைநிகழ்த்தும் வீடியோ வெளியானது. இது தொடர்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

☞ 11

### வெளிநாட்டு ஆசைகாட்டி
## இரண்டு வாரங்களில் ரூ. 2 கோடி 'அபேஸ்'

யாழ்ப்பாணம், டிசெ.23
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த இருவாரங்களில் மட்டும் வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து பல கோடி ரூபா மோசடிகள் நடந்துள்ளன. இது தொடர்பாக 10 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

☞ 11

## ஆட்கடத்தல் குற்றச்சாட்டு; இருவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், டிசெ. 23
ஆட்கடத்தல் குற்றச்சாட்டில் இருவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.
ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் இருவர், கல்வியங்காடு பகுதியைச் சேர்ந்த 55

☞ 11

### கொட்டித்தள்ளிய மழை
## யாழ்ப்பாணத்தில் 46 ஏக்கர் பயிரழிவு

யாழ்ப்பாணம், டிசெ. 23
யாழ்ப்பாணத்தில் அண்மையில் நிலவிய கடும் மழையுடனான காலநிலையால், 46 ஏக்கர் பரப்பளவு நெற்செய்கை முற்றாக அழிவடைந்துள்ளது என்று யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி கைலேஸ்வரன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வேலணை பிரதேச செயலர் பிரிவில் 7.04 ஏக்கர் நெற்செய்கையும், காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 3.325 ஏக்கர் நெற்செய்கையும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 18.75 ஏக்கர் நெற்செய்கையும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 17 ஏக்கர் நெற்செய்கையும் இவ்வாறு அழிவடைந்துள்ளன.

☞ 11

# உண்மை, நல்லிணக்க ஆ.குழுவில் கொஞ்சம்கூட நம்பிக்கை இல்லை!
### காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 23
காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்துக்கான தீர்வு என்ற பெயரில் முன்வைக்கப்படவுள்ள உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவில் நம்பிக்கை இல்லை. இந்த ஆணைக்குழு சர்வதேசத்தை ஏமாற்றும் கபட நாடகம் என்று காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.
வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் செயலாளர் லீலாதேவி இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-
பாதிக்கப்பட்ட தரப்புகளுடன் பேசாது அரசியல்வாதிகளுடன் கலந்துரையாடி, உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு என்ற போர்வையில் சர்வதேசத்தை ஏமாற்ற முனையும் செயற்றிட்டத்தை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம்.

☞ 11

## பிரதேச செயலர்கள் பலருக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 23
யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய பல பிரதேச செயலர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து இந்த இடமாற்றம் நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்படுகின்றது.
நல்லூர் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன்யோகநாயகம், திருகோணமலை மாவட்ட சமுர்த்தித் திணைக்களப் பணிப்பாளராக இடமாற்றப்பட்டுள்ளார்.
தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ்.சிவசிறி, கோப்பாய் பிரதேச செயலராகவும், கோப்பாய் பிரதேச செயலர்

☞ 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல்வாதிகளுக்கு கட்டுப்படும் அதிகாரிகள்

## தேசிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

**கொழும்பு, டிசெ. 23**
**அரசியல்வாதிகளின் சட்டவிரோதச் செயற்பாடுகளையும் உத்தரவுகளையும் நிறைவேற்றவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள் அரச அதிகாரிகள் தள்ளப்பட்டுள்ளனர். இதற்குச் சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளரின் கைது சிறந்த எடுத்துக்காட்டு.**

-இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் செயலாளர் மருத்துவர் நிஹால் அபயசிங்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
அரசியல்வாதிகளால் வழங்கப்படும் உத்தரவுகளின் உண்மைத் தன்மையை ஒன்றுக்கு இரண்டு தடவை பரிசோதிக்குமாறு சட்டம் சொல்கிறது. தவறின்விளைவுகளுக்கு முகம் கொடுக்க நேரிடுவது மக்களே. பக்கவிளைவுகளை ஏற்படுத்தும் ஹியூமன் இம்யூனோகுளோபுலின் என்ற மருந்தை இறக்குமதி செய்தமைக்கு உடந்தையாக இருந்தார் எனத் தெரிவித்தே சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மக்களுக்குத் தரமான மருந்துகளை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு - என்றார். (ச-6)

# கூட்டணி மலரும்

கொழும்பு, டிசெ. 23
ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் அமையவுள்ள புதிய கூட்டணி எதிர்வரும் ஜனவரியில் மலரும். சஜித்தான் கூட்டணியின் தலைவர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எதிரணிப் பக்கம் வந்தவர்களில் சிலர் நேரடியாக ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்பட உள்ளனர். கட்சிக்கும், கூட்டணிக்கும் ஒரு தலைவர் தான். அவர் சஜித். கூட்டணிக்கு பொதுச்செயலாளர் ஒருவர் இருப்பார். தலைமைத்துவசபை ஒன்று இருக்கும். சஜித்தின் தலைமைத்துவத்தை அனைவரும் ஏற்றுள்ளனர். இதில் எவ்வித பிரச்சினையும் இல்லை- என்றார். (ஒ-44)

# சட்டவிரோத மரக்காலை; தண்டப்பணம் விதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 23
மருதனார்மடத்தில் அனுமதிப் பத்திரமின்றி மரக்காலை நடத்தியமை மற்றும் தச்சுப்பட்டறை என்பனவற்றை அனுமதிப்பத்திரம் இன்றி நடத்தியவருக்கு எதிராக 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் மல்லாகம் நீதிவான் நீதிமன்றினால் விதிக்கப்பட்டது.
கடந்த இரண்டு வாரங்களின் முன்னர் சட்டவிரோதமான முறையில் அனுமதிப்பத்திரமின்றி மரக்காலை மற்றும் தச்சுப்பட்டறை இயங்குவதாக யாழ். மாவட்ட வளப்பாதுகாப்புத் திணைக்களத்தினருக்கு கிடைத்த தகவலுக்கமைய இந்தச் செயல் கண்டறியப்பட்டது.
இதனையடுத்து அரிவுகாலை மற்றும் தச்சுப் பட்டறையை நடத்திய உரிமையாளரைக் கைது செய்து மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தினர். சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில் நீதிவான் ரூபா 30 ஆயிரம் தண்டப்பணம் விதித்து கடுமையாக எச்சரித்து விடுவித்தார். (ரி-125)

# சிறுகதைப் போட்டி பரிசு ரூ. 1 லட்சம்!

யாழ்ப்பாணம், டிசெ. 23
'தாயகஒலி' பிரதம ஆசிரியர் தம்புசிவாவின் அகவை 80 அமுதவிழாவை முன்னிட்டு இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம் மற்றும் லண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம் இணைந்து சிறுகதைப் போட்டியை நடத்தவுள்ளது.
பாடசாலை மாணவர்களுக்கான திறந்த போட்டி, சகலருக்குமான சிறுகதைப் போட்டியென இருபிரிவுகளாக நடத்தப்படும் இந்தப் போட்டியின் பரிசுத்தொகை ஒரு இலட்சம் என அறிவிக்கப்பட்டுள்ளது. போட்டிக்கான படைப்புகள் அனைத்தும் சொந்தப்படைப்பாக அமையவேண்டும். ஏற்கனவே வெளிவந்த படைப்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கப்படைப்புகள் யாவும் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.
எதிர்வரும் பெப்ரவரி 15ஆம் திகதிக்கு முன்பதாக படைப்புகளை இணைப்பாளர் இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம், இல.9-2/1 நெல்சன் பிளேஸ், கொழும்பு- 6 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். மேலதிக விவரங்களை 077 1877999, 011 2364124 என்ற இலக்கங்களுக்குத் தொடர்புகொண்டு பெறலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# சஜித் - ரணில் இணைவு சாத்தியமேயில்லை

கொழும்பு, டிசெ. 23
ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து பயணிப்பதற்குச் சாத்தியமே இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.
பொதுஜன பெரமுனக் கட்சிதான் இந்த நாட்டை வங்குரோத்தடையவைத்தது. அந்தத் தரப்புடன்தான் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரான தற்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி இருக்கின்றார்.
இவ்வாறு நாட்டை வங்குரோத்தடைய வைத்தவர்களால் அதனை மீட்க முடியுமா? முடியாது. புதியதொரு அரசே எமது நாட்டுக்குத் தேவைப்படுகின்றது. அதற்கான வாய்ப்பை ஜனாதிபதி ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்- என்றார். (ஒ-44)



# பண்டிகைக் காலத்தில் நாட்டுக்குப் பாதுகாப்பு

கொழும்பு, டிசெ. 23
எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.
இதற்கென பதில் பொலிஸ்மா அதிபரால் இரண்டு விசேட சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.
பொதுமக்கள் அதிகமாக நடமாடும் இடங்களில் சிவில் உடையிலும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# நிர்மாணங்களில் குறைபாடு; யாழ்ப்பாணத்தில் ஆராய்வு

யாழ்ப்பாணம், டிசெ. 23
மக்களுக்கு நிலைபேறான அபிவிருத்திப் பணிகளைச் செயற்படுத்துவதோடு நிர்மாணப்பணிகளிலே ஊழலற்ற - சூழலுக்குப் பாதகமற்ற நிலைமைகளை ஏற்படுத்த சிறந்த நிர்மாண பணிகளை உருவாக்குவது தொடர்பில் ஆராயும் கூட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.
இதில் நீடித்து நிலைத்திருக்கும் நிர்மாணப் பணிகள் குழுமத்தின் ஒருங்கிணைப்பாளர் சமந்த அபயவிக்ரம பங்கேற்று தெளிவுபடுத்தினார். கடந்த காலத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளால் நிர்மாணப் பணிகளில் ஏற்பட்ட குறைபாடுகள் தொடர்பிலும் ஆராயப்பட்டன.
இதில் ஓய்வுபெற்ற மாவட்டச் செயலர்கள், பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள், பேராசிரியர்கள் பல்வேறு திணைக்கள அதிகாரிகள், பிரதேசசபை செயலாளர்கள், சமூக நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். (ச-27)

# மன்னார் மாவட்டச் செயலராக க.கனகேஸ்வரன் நியமனம்

மன்னார், டிசெ. 23
வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலர் க.கனகேஸ்வரன் மன்னார் மாவட்டத்தின் புதிய மாவட்டச் செயலராக இன்று சனிக்கிழமை காலை பதவியேற்கவுள்ளார். இவருக்கான நியமனக் கடிதம் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது. (ஒ-125-214)



# அல்வாய் கொலை வழக்கு: சந்தேகநபர்களுக்கு மறியல்!

யாழ்ப்பாணம், டிசெ. 23
அல்வாய் கிழக்கில் மூதாட்டியைக் கழுத்து நெரித்துக் கொலை செய்த மூன்று சந்தேகநபர்களை எதிர்வரும் ஜனவரி மாதம் நான்காம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் கிருசாந்தன் பொன்னுத்துரை உத்தரவிட்டார். (ஒ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளின் வாழ்வோடு எவரும் விளையாடாதீர்!

## உ.கிழங்கு உற்பத்தியாளர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், டிசெ. 23**

**யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு பழுதடைந்த உருளைக்கிழங்கு விதைகளை வழங்கி அவர்களுடைய வாழ்வாதாரத்தில் விளையாடவேண்டாம். இதன் பின்னணி தொடர்பில் உடன் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் - இவ்வாறு யாழ்.மாவட்ட நவீனமய மாக்கல் செயற்றிட்ட உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் சங்கத்தினுடைய தலைவர் செ.துஷ்யந்தன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உருளைக்கிழங்கு விதைகள் உத்தியோகபூர்வமற்ற முறையில் வழங்கப்படும்போதே ஐயம் எழுந்தது.

கடந்த காலங்களில் பெட்டிகளிலேயே கிழங்குகள் எமது களஞ்சியசாலைக்கு எமக்குக் கிடைக்கப்பெறும். இந்தமுறை சாக்கில் அடைத்தே வழங்கப்பட்டன. அதில் தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி, இணையத்தள முகவரி, ஆதாரத்துக்கு எந்த ஒரு விடயங்களும் அதிலில்லை.

வழமையாக வருகின்ற கிழங்குகள் மூன்று மாதங்கள்வரை களஞ்சியத்தில் இருக்கும். ஆனால், பழுதடைவதில்லை. இந்த உருளைக்கிழங்கின் மூலம் மண்ணில் ஏற்படும் பக்றீரியாத் தாக்கம் ஏனைய பயிர்களையும் பாதிக்கும் என்று உத்தியோகபூர்வமாக தெரிவிக்கப்படுகிறது - என்றார். (ச-27)

## யாழ்.மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 23

யாழ்.மாவட்டச் செயலகம் உட்பட அனைத்து அரச நிறுவனங்களிலும் நேற்றும் நேற்றுமுன்தினமும் சிரமதானப் பணிகள் மூலம் டெங்கு நுளம்பு பெருகக்கூடிய இடங்கள் துப்புரவு செய்யப்பட்டன.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்.மாவட்டச் செயலக உட்புற, வெளிப்புறச் சூழலில் டெங்கு நுளம்பு பெருகக்கூடிய இடங்கள் கண்டறியப்பட்டு துப்புரவாக்கப்பட்டன. (ச-66)

## உபஅஞ்சலகத்தில் திருட்டுக்கு முயற்சி

யாழ்ப்பாணம், டிசெ. 23

ஆனைக்கோட்டையிலுள்ள உப அஞ்சல் அலுவலகத்தில் கூரைபிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் அங்கு எதுவுமின்மையால் முயற்சியைக் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது என்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ச-125)

## யாழ்ப்பாணத்தில் இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. *23*

*தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான அவசரக் கலந்துரையாடலொன்று இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் யாழ்.தந்தை செல்வா கலையரங்கில் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.*

*(ஒ-100-66-125)*

## வடிகின்றது வெள்ளம் வீடு திரும்பும் மக்கள்

முல்லைத்தீவு, டிசெ. 23

முல்லைத்தீவில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடைத் தங்கல் முகாம்களுக்கு வருகை தந்த குடும்பங்கள் தற்போது வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றன என முல்லைத்தீவு மாவட்ட செயலர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்தார். 'வெள்ளத்தால் பயிரழிவுகள் ஏற்பட்டவர்களுக்கான அழிவுகளை மதி ப்பீடு செய்து எதிர்காலத்தில் இழப்பீடுகளை வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன' - என்றார். (ஒ-13)

## சிறுவர்களே செல்லாதீர்!

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின் சகல குளங்களும் மற்றும் நீர் நிலைகளும் நிரம்பி வழிவதன் காரணமாக சிறுவர்கள் நீர் நிலைகளை நோக்கிச் செல்லவேண்டாம் என மாவட்ட நீர்ப்பாசன அதிகாரிகளால் அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன.

நீர்நிலைகளை நோக்கிச் சிறுவர்கள் சென்றதன் காரணமாக உயிராபத்துகள் ஏற்பட்டிருந்தன.

தற்போது குளங்கள் நிரம்பி வழிவதன் காரணமாக குளங்களுக்கு அருகிலோ நீர்நிலைகளுக்கு அருகிலோ செல்லவேண்டாம் எனவும் இது தொடர்பாக பெற்றோர் விழிப்புணர்வுடன் செயற்படுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி-13)

## ஐஸுடன் கைது

**யாழ்ப்பாணம், டிசெ. 23**

**யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய போதை ஒழிப்புப் பிரிவால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை 40 வயதுடைய சந்தேக நபர் உயிர்கொல்லி ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார். (ரி-26)**

## பேருந்துகளின் போட்டி; தாயும் பிள்ளையும் காயம்

**சாவகச்சேரி, டிசெ. 23**

**அரச பேருந்து வருவதைக் கண்ட தனியார் பேருந்தின் சாரதி உடனடியாக பேருந்தை இயக்கியதால், தனியார் பேருந்திலிருந்து இறங்கிய தாயும், பிள்ளையும் நிலத்தில் வீழ்ந்து காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை கைதடி வடக்கு மாகாணசபைக்கு முன்னால் இடம்பெற்றது. (ஒ-9)**



# புதினம் தெரியுமோ?

**தமிழ்க் கட்சியளோட ரணில் இந்தமுறை நடத்தின கூட்டத்துக்கு கனபேர் 'அப்செண்ட்'. முக்கியமா வடக்கில இருந்து திலீபன் எம்.பி.யைத் தவிர வேற ஒரு எம்.பி.யும் கூட்டத்தை எட்டியும் பாக்கேலை. அவ்வளவு ஏன், அரசாங்கத்தோட நிக்கிற டக்ளஸ், பிள்ளையான், வியாழேந்திரன் கூட ரணிலின்ர அழைப்பை மதிக்கவேயில்லை. இந்தக் கூட்டத்துக்கு தாங்கள் போகாதததுக்கு எல்லாரும் ஒவ்வொரு காரணங்களைச் சொல்லுகினம். அதிலையும் எங்கட விக்கியர் சொன்ன காரணங்களைக் கேட்டால் உங்களுக்குத் தலை சுத்தாமல் இருக்காது. இவ்வளவு நாளும் ரணில் கூப்பிட முன்னமே பைல் கட்டுகளோட ஓடிப்போய் முன்கதிரையில இருக்கிற விக்கியர், இந்தமுறை கூட்டத்துக்கு போகாதது கனபேருக்கு அதிர்ச்சிதான். இப்பிடிப்பட்ட நிலைமையிலதான், முந்தநாள் பின்னேரம் மீடியாக்காரர் சிலரைச் சந்திச்ச விக்கியர், தான் ஏன் கூட்டத்துக்குப் போகேலை எண்டு காரணங்களை அடுக்கியிருக்கிறார்.**

**"ரணில் இந்தமுறை எம்.பி.யா வரேக்க ஒருத்தரும் அவரைக் கவனிக்கிறேலை. நான் பார்லிமெண்ட் போய் வரேக்க என்னைப் பார்த்துச் சிரிச்சுக் கதைப்பார். அப்பதான் தமிழருக்குச் சரியான தீர்வைக் குடுக்கோனும் எண்டு என்னட்ட அவர் சொன்னதை நம்பிட்டன். அதோட ரணிலின்ர ராசிக்கு அவருக்கு கடும் யோகம் அடிக்கும் எண்டு எனக்குத் தெரியும். அதால அவரோட நிண்டால் சிலதை நானும் சாதிக்கலாமெல்லோ.**

**குறைஞ்சது மாகாணசபையையாவது ரணில் பலப்படுத்துவார் எண்டுதான் அவரோட சேர்ந்து சில வேலையளைச் செய்ய நினைச்சன். ஆனால் அவரும் ஏமாத்திப் போட்டார். மாகாண நிதியை, மாவட்ட அபிவிருத்திக் குழுக்கள் மூலம் செலவழிக்க அவர் பிளான் போடுறார். அதைத்தான் பட்ஜெட்டிலையும் சொல்லியிருக்கிறார். அப்பிடியெண்டால் அவர் மாகாணசபையைப் பலப்படுத்த மாட்டார் எண்டது கிளியரா விளங்கிட்டுது. இனி இப்பிடியான கூட்டங்களுக்குப் போறதால ஒரு பிரியோசனமுமில்லை . அதாலதான் போகேலை எண்டு சொன்ன விக்கியர், கடைசியா இன்னொரு காரணத்தையும் சொன்னார்.**

**மஹிந்த கூட்டம் வைச்சாலாவது ரீ, றோல் எண்டு ஏதாவது கிடைக்கும். ரணில் பச்சைத் தண்ணிகூடத்தராமல்தான் கூட்டம் நடத்துவார். சும்மா போய் காய்ஞ்சிட்டு வரவேண்டியதுதான் எண்டு அவர் கடைசியாச் சொன்னகாரணம் தான் கூட்டத்துக்குப் போகாததுக்கான உண்மையான காரணமா இருக்கும் போல. அதைவிடப் பகிடி என்னெண்டால், மற்ற எம்.பி.மாரெல்லாம் மீடியாக்காரரைச் சந்திக்கேக்க ரீயாவது குடுப்பினம். ஆனால் இந்தச் சந்திப்பிலகூட விக்கியர் பச்சைத் தண்ணியும் குடுக்கேலையாம். இந்த விசயத்தில விக்கியருக்கும், ரணிலுக்கும் நல்ல ஒற்றுமைதான்.**



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்



**வாக்கியப் பஞ்சாங்கப்படி சனிபகவான் டிசெம்பர் 20 ஆம் திகதி மகர ராசியில் இருந்து கும்ப ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார். 20.12.2023 முதல் 6.3.2026 வரை கும்பராசியில் சஞ்சரிக்கவுள்ளார்.**




## அல்லல் தருவாரா அட்டம சனி?

கலையின் மீது தணியாத ஆர்வமும் எந்தத் துயர் வந்தாலும் கலங்காமல் உழைக்கும் தன்மையும் கொண்ட கடகராசி அன்பர்களே.... இதுவரை கண்டகச் சனியாக மகரத்தில் இருந்து பலன் கொடுத்துக்கொண்டிருந்த சனிபகவான் அட்டமச் சனியாக தற்போது மகர ராசிக்குள் அடியெடுத்து வைக்கிறார். அட்டமச் சனி ஆட்டிப்படைப்பாரோ என்ற பயம் வேண்டாம். சனிபகவான் சொந்த வீட்டில் ஆட்சிபெற்று அமர்வதால் சில நல்ல பலன்களும் ஏற்படும். பேச்சில் துணிவு பிறக்கும். கடினமான உழைப்பைக் கொடுக்கும் சிந்தனை தோன்றும். எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் சாதித்துக் காட்ட வேண்டும் என்கிற எண்ணம் மேலோங்கும். என்றாலும் எதிலும் எச்சரிக்கை அவசியம். யாரையும் நம்பிப் பணம் கொடுக்கவோ வாங்கவோ வேண்டாம். குடும்பத்தில் பிரச்சினைகளெ முந்தால் பேசித் தீர்க்க வழிபாருங்கள். கொடுக்கல் வாங்கலில் கவனமாக இருங்கள். மதிப்புமிக்க ஆவணங்கள் காசோலைகளைக் கையாளும்போது கவனம் தேவை. குடும்பத்தில் தேவையில்லாமல் உணர்ச்சிவசப்பட்டுப் பேசாதீர்கள். பிள்ளைகளை விட்டுப்பிடியுங்கள். நண்பர்களுக்கு உதவுகிறேன் என்று தடாலடியாக எதையும் செய்ய வேண்டாம். உங்களை சிக்கலில் மாட்டி விட்டுவிட்டு அவர்கள் விலகிப் போய்விடுவார்கள். ஆரோக்கியத்தில் உரிய கவனம் தேவை.

2024 ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பிறகு குருபகவான் பாக்கியஸ்தானத்தில் சஞ்சரிக்கத் தொடங்குவார். அப்போது மலை போல் வந்த துன்பங்கள் எல்லாம் பனிபோல் விலகும். பணப்பிரச்சினைகள் தீரும். திட்டமிட்டபடி காரியங்கள் நிறைவேறும். சுபநிகழ்ச்சிகள் கைகூடும். சனிபகவான் உங்கள் ராசிக்கு 2ம் வீடான சிம்ம ராசியைப் பார்ப்பதால் பேச்சில் உற்சாகமும் துணிச்சலும் பிறக்கும். என்றாலும் உணர்ச்சிவசப்பட்டுப் பேசுவதைத் தவிர்க்கவும். ஆனால் சில நேரங்களில் உணர்ச்சிவசப்பட்டு பேசிச் சிக்கிக்கொள்வீர்கள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சனி பகவான் உங்களின் 5ஆம் வீடான விருச்சிகத்தைப் பார்ப்பதால் எச்சரிக்கை உணர்வு அதிகரிக்கும்.

**வியாபாரம் :** தொழிலில் போட்டிகள் அதிகரிக்கும் என்றாலும் கடின உழைப்பின் மூலம் விரிவுபடுத்துவீர்கள். நல்ல இலாபம் வரும். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்களிடம் விட்டுக்கொடுத்துப் போங்கள்.

**உத்தியோகம்:** பணிச்சுமை அதிகரித்த வண்ணம் இருக்கும். அதிகாரிகள் கண்டிப்புக் காட்டுவார்கள். சில நேரங்களில் விரக்தி மனோபாவம் உண்டாகும். நேரங்காலம் பார்க்காமல் உழைத்தும் எந்தப் பயனும் இல்லையே, என்று அவ்வப்போது ஆதங்கப்படுவீர்கள். புது அதிகாரியால் சில நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும். புது வாய்ப்புகளும், பொறுப்புகளும் சற்று தாமதமாகி கிடைக்கும்.

**மொத்தத்தில் இந்த சனிப்பெயர்ச்சி உங்களைப் பாடாய்படுத்தினாலும் சமயோஜித புத்தியால் சாதிக்க வைத்து வாழ்வில் அடுத்த கட்டத்துக்கு உங்களை உயர்த்துவார்.**

## இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** ஒரேநாளில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். அவசர முடிவுகளை தவிர்ப்பது மிக மிக நல்லது. அலைச்சலும் மனக்கலக்கமும் அதிகரிக்கும். விழிப்புணர்வுடன் இருக்க வேண்டிய நாள். நற்பலன் அதிகரிக்கும்.



**இடபம்:** திடீர் பயணங்கள் மற்றும் செலவுகளால் திணறுவீர்கள். உறவினர்களால் மனஸ்தாபங்கள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும். போராடி வெல்லும் நாள். வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.



**மிதுனம்:** பெற்றோரின் ஆதரவு பெருகும். மற்றவர்களுக்காக சில செலவுகளைச் செய்து பெருமைப்படுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள்.



**கடகம்:** எதிர்பார்த்த காரியம் இழுபறியாக முடியும். எதிர்பாராத ஆதாயமும் உண்டாகும். புதிய முயற்சியை தொடங்குவது நல்லது. பிரச்சினைகள் ஏற்படக்கூடும். அனுசரித்துச் செல்வது நல்லது.



**சிம்மம்** சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயற்படுவீர்கள். உறவினர் நண்பர்களால் அனுகூலம் உண்டு. உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். நன்மை நடக்கும் நாள். சிரமங்கள் பெரிதும் குறையும்.



**கன்னி:** குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். புண்ணிய ஸ்தலம் சென்று வருவீர்கள். நெளிவு சுழிவு களை கற்றுக் கொள்வீர்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.



**துலாம்:** செலவுகள் அதிகமாகும். அநாவசியமாக அடுத்தவர்களின் விஷயத்தில் தலையிட வேண்டும். யாரையும் யாருக்கும் நீங்கள் சிபாரிசு செய்ய வேண்டாம். போட்டிகள் அதிகரிக்கும். மறைமுக விமர்சனம் நீங்கும்.



**விருச்சிகம்:** தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். ஒத்துழைப்பு அதிகரிக்கும். விலை உயர்ந்த ஆபரணங்களை வாங்குவீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.



**தனுசு:** புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் வருங்காலத்திட்டத்தில் ஒன்று நிறைவேறும். நண்பர்களால் ஆதாயம் பெருகும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள்.



**மகரம்:** எதிர்ப்புகள் அடங்கும். தாய் வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக்கொள்வார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.



**கும்பம்:** உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். உறவினர்கள் பாராட்டும்படி நடந்துகொள்வீர்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். மாறுபட்ட அணுகுமுறையால் முன்னேறும் நாள்.



**மீனம்:** அழகும் இளமையும் கூடும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். ஆதரவு கிட்டும். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். மனசாட்சிபடி செயற்படும் நாள்.

## அனுமர் ஜெயந்தி இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், டிசெ. 23

மருதனார்மடம், ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் அனுமர் ஜெயந்தி இலட்சார்ச்சனைப் பெருவிழா எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி அடுத்த வருடம் ஜனவரி மாதம் 10ஆம் திகதி புதன்கிழமை பூர்த்தியாகவுள்ளது. (ரி)

## மாணவர்களுக்கான சிவதொண்டர் பயிற்சி

யாழ்ப்பாணம், டிசெ. 23

அகில இலங்கை சைவமகாசபையின் ஏற்பாட்டில் வலிகாமம் மற்றும் தீவகக் கல்வி வலயங்களின் ஒத்துழைப்புடன் இன்று சனி, நாளை ஞாயிறு மற்றும் திங்கட்கிழமைகளில் தரம் - 8, தரம் - 9 மாணவர்களுக்கு யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இளம்சிவத்தொண்டர்வதிவிடப்பயிற்சிப்பட்டறை நடத்தப்படவுள்ளது. (ஒ-66,125)

## கலை இலக்கியப் பேரவை பொன்விழா இன்று

யாழ்ப்பாணம், டிசெ. 23

கலை இலக்கியப் பாதையில் கடந்த 50 ஆண்டுகளாகப் பயணிக்கின்ற தேசிய கலை இலக்கியப் பேரவையின் பொன்விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வேம்படி வீதியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்துக்கருகிலுள்ள றிம்மர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவரும், எழுத்தாளரும், தாயகம் சஞ்சிகையின் ஆசிரியருமான க.தணிகாசலம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

கலைநிகழ்வுகள் வரிசையில் த. ஸ்ரீபிரகாஸ் தலைமையில் 'மக்கள் வாழ்வைச் சீர்படுத்துவது நிகழ்காலத்தின் புரிதலா? எதிர்காலம் பற்றிய ஏக்கமா?' என்ற தலைப்பிலான பட்டிமன்றம் சிறப்பிக்கவுள்ளது.

மேலும் வவுனியா மாவட்ட தேசிய கலை இலக்கியப் பேரவையின் தயாரிப்பில் ந. பார்த்தீபனின் நெறியாள்கையில் 'ஏதோ உயிரோடு இருக்கிறோம்' என்ற குறு நாடகமும், செம்முகம் ஆற்றுகைக் குழுவின் தயாரிப்பில் கு.சாரங்கனின் நெறியாள்கையில் 'ஊன் ஆட்டம்' மற்றும் க.சத்தியசீலனின் நெறியாள்கையில் 'தேவை' ஆகிய குறுநாடகங்களுடன் சண் நாடகக் குழுவினரின் தயாரிப்பில், பு. கணேசராசாவின் நெறியாள்கையில் 'என்னவென்று சொல்வேனடி?' நாடகமும் இடம்பெறவுள்ளன. நிகழ்வின் விசேட அம்சமாகப் புகைப்படக் கண்காட்சி மற்றும் புத்தகக் கண்காட்சி ஆகியனவும் இடம்பெறவுள்ளன. (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் ?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காலத்தை இழுத்தடிப்பதில் வல்லவர். காலத்தைக் கடத்துவதன் ஊடாக விடயங்களை வலுவிழக்கச் செய்வார். தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுகளின்போதும், பல விடயங்களைச் செய்வதாக உறுதியளித்து அவற்றைச் செயற்படுத்தாமல் இழுத்தடித்து, புலிகளைப் பல வீனப்படுத்தியவர் ரணில். ஆயுதபலத்துடன் கோலோச்சிய புலிகளையே தனது வலையில் வீழ்த்திய ரணிலுக்கு, தற்போதைய சூழலில் கன்னைபிரிந்து நிற்கும் தமிழ்த் தரப்பைக் கையாள்வது ஒன்றும் கடினமாக இருக்கப் போவதில்லை. தனது ஜனாதிபதிப் பதவிக் காலத்தின் இறுதிக்கட்டத்தில் அவர் இருக்கின்றார். தமிழ் மக்களுக்குத் தீர்வை வழங்கி (அவர் வழங்கப்போவதில்லை என்பதுவேறு விடயம்) ஜனாதிபதித் தேர்தலில் தன் கையைச் சுட்டுக்கொள்ளப்போவதில்லை. அந்தப் பழி தன் மீது வந்துவிடக்கூடாது என்பதிலும் கவனமாக இருக்கின்றார். தமிழ்நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நேற்றுமுன்தினம் நடத்திய பேச்சுகளின்போது மீண்டும் புதிய அரசமைப்பு என்ற கயிற்றை விட்டிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அதுவும் புதிய நாடாளுமன்றம் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அதன் ஊடாகத் தீர்வு என்று கதையளந்திருக்கின்றார்.

இதே ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக தமிழர் தரப்பு எதிரணியிலிருந்துகொண்டு கட்டுப்பாடற்ற ஆதரவை வழங்கி அவரைப் பல தடவை காப்பாற்றியது. அப்போது புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி முன்னெடுக்கப்பட்டு வரைவும் உருவாக்கப்பட்டது. ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை. இப்போது புதிய நாடாளுமன்றத்தில் மீண்டும் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி என்று ரணில் கூறியிருக்கின்றார். கோத்தாபய ராஜபக்சவும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் புதிய அரசமைப்புக்கு நிபுணர் குழுவை நியமித்து அவர்களும் வரைவைத் தயாரித்தார்கள். தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு புதிய அரசமைப்பு உருவாக்கம் என்று சொல்லி எந்தவொரு சிங்களத் தலைவர்களும் காலத்தைக் கடத்துவதற்கு இடமளிக்கக்கூடாது. தமிழ் மக்களும் அவர்களின் தலைவர்களும் அதில் உறுதியாக இருக்கவேண்டும். தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக உருவாக்கப்பட்ட எத்தனையோ ஆவணங்கள் , வரைவுகள் இருக்கின்றன. அவற்றை அடிப்படையாக வைத்து அதை நிறைவேற்ற அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும். புதிய அரசமைப்பு என்ற சிங்களத் தலைவர்களின் பேச்சுகளை அடியோடு நிராகரிக்கவேண்டும். அவர்களின்காலத்தை இழுத்தடிக்கும் யுக்திக்கு ஒத்துழைக்கக் கூடாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க "13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துகின்றேன். இந்த ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி சுதந் திர நாளுக்கு முன்னதாக அதை நிறைவேற்றுகின்றேன்" என்றெல்லாம் கதையளந்துவிட்டு இப்போது வெறும் கையால் முழம்போடும் வேலையைச் செய்துகொண்டிருக்கின்றார். ரணில் விக்கிரமசிங்க தன்னைத் தமிழ் மக்களின் அனுதாபியாகக் காட்டிக்கொண்ட ஒருவர். தெற்கிலிருக்கும் சிங்களத் தலைவர்களில் தமிழ் மக்களின் பிரச்சினையைப் புரிந்துகொண்ட ஒருவர் என தமிழ்த் தலைவர்களே சிலாகிக்கும் அளவுக்குத் தன்னை வெளிக்காட்டிக்கொள்ளும் ஒருவர். ஆனால் அவரும் கடைந்தெடுந்த சிங்கள இனவாதத் தலைவர்தான் என்பதை தமிழ்த் தலைமைகள் இனியாவது உணர்ந்துகொள்ள வேண்டும். தமிழ்நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பில் புதிய அரசமைப்புத் தொடர்பான பேச்சே, அவரது ஒட்டுமொத்த யோக்கியத்தையும் அம்பலப் படுத்தியிருக்கிறது. ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில்தான் தமிழ் மக்கள் பலமிழக்கச்செய்யப்பட்டனர் என்பதும், விடயங்களை ஒப்பேற்றுவதைப்போலக் காண்பித்து ஏமாற்றியவர் என்பதையும் நாம் இனியாவது புரிந்துகொள்ளவேண்டும்.




# மாகாணத்துக்கான உயர்கல்வி; பல்கலையாக மாறவும் வாய்ப்பு

## உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் தகவல்

**யாழ்ப்பாணம், டிசெ. 23**

**மாகாணசபைகளுக்கு வழங்கப்படும் உயர்கல்விநிறுவனங்களின் நடவடிக்கை சீராக முன்னெடுக்கப்படுமாக இருந்தால் அதனைப் பல்கலைக்கழகமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டதாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.**



தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இந்தச் சந்திப்பிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார் என சுரேன் ராகவன் தெரிவித்தார். (ஓ-125)

## 12 செயலாளர்கள் நியமனம்

கொழும்பு, டிசெ. 23
10 அமைச்சுக்கான செயலாளர்கள் மற்றும் இரண்டு மாகாணங்களுக்கான பிரதம செயலாளர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்டுள்ளனர்.
ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நியமனங் கள் வழங்கப்பட்டன. (ச-44-26)

## முள்ளிவாய்க்கால் - காஸா ஒப்பிட்ட 'யுனிசெப்' பேச்சாளர்

2007 மற்றும் 2008 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் முள்ளிவாய்க்காலில் தான் பெற்ற அனுபவங்களை காஸாவுடன் ஒப்பிட்டுள்ளார் 'யுனிசெப்' பேச்சாளரான ஜேம்ஸ் எல்டர்.

"எம்மிடம் சுயாதீன ஆய்வுக் குழுக்கள் இருந்தன. எனினும் இலங்கை விடயத்தில் நாங்கள் தோல்வியடைந்துள்ளோம். முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற மோதலில் நூற்றுக்கணக்கான குழந்தைகள் சிறுவர்கள் கொல்லப்பட்டதையும் காயமடைந்ததையும் நான் நேரில் பார்த்தேன். அப்போது நான் புலிகளுக்கு ஆதரவாக பரப்புரை செய்வதாக ஐ.நா.வுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி கருத்துத்தெரிவித்திருந்தார்." என்று எல்டர் கூறியுள்ளார்.

எல்டரை இலங்கை அரசாங்கம் வெளியேற்றியிருந்தமை குறிப்பிடத் தக்கது. (ஒ-6)

## கொடுப்பனவு விடுவிப்பு

டிசெம்பர் மாதத்துக்குரிய 'அஸ்வெசும' கொடுப்பனவுக்காக 8, 700 மில்லியன் ரூபா வங்கிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். (ச-இ)

## இனவாதிகளை இணைக்கவேண்டாம்

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் அமையவுள்ள கூட்டணியில் இனவாதிகளை இணைத்துக்கொள்ள வேண்டாம் என்று அந்தக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் தமிழ் முற்போக்கு கூட்டணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன வலியுறுத்தியுள்ளன. (ஒ-44)

## தம்மிக்க இறங்கினால் ரணில் போட்டியிடார்!!

கொழும்பு, டிசெ. 23
பொதுஜன பெரமுன தம்மிக்க பெரேராவை களமிறக்கவுள்ளதால் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடமாட்டார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார். (ஒ-44)

### நாளை

24.12.2023
ஞாயிற்றுக்கிழமை
மார்கழி 08
சுபநேரம் : 09.26 - 10.56
ராகுகாலம் : 04.56 - 06.26
பிரதோஷ விரதம்
கார்த்திகை விரதம்

### நாளொரு நல்வார்த்தை

அறிவு உங்களுக்கு ஆற்றலை ஈட்டித்தரும், குணம் உங்களுக்கு மரியாதையை ஈட்டித் தரும்
- புரூஸ் லீ-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாகனத்திலேயே சுற்றியடித்து மக்களை ஏமாற்றிய டக்ளஸ்

யாழ்ப்பாணம், டிசெ. 23

உடுப்பிட்டி மதுபானசாலை நோக்கிச் சென்று வாகனத்திலிருந்து இறங்காமலேயே திரும்பிச் சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது மக்கள், சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் பெரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

உடுப்பிட்டி, இமையாணன் மேற்குப் பகுதியில் பொதுமக்களின் கடும் எதிர்ப்பையும் மீறி அமைக்கப்பட்டுள்ள மதுபானசாலை தொடர்பில் நேரில் ஆராய்வதற்காக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அங்கு பயணம் மேற்கொண்டார்.

கரவெட்டிப் பிரதேச செயலர் ஈ.தயாரூபனும், பருத்தித்துறைப் பொலிஸாரும் மேற்படி பகுதிக்கு வருகை தந்திருந்தனர்.

மதுபானசாலைக்கு அருகில் அமைந்துள்ள ஆலயங்கள், பாடசாலைகளை தான் வந்த வாகனத்தில் இருந்தபடியே கடற்றொழில் அமைச்சர் பார்வையிட்டதுடன் அங்கு வீதியில் நீண்ட நேரமாக நின்றிருந்த பொதுமக்களைச் சந்திக்காமலேயே சுமார் பத்து நிமிடங்களுக்குள் அங்கிருந்து திரும்பிச் சென்றுள்ளார்.

இதுதொடர்பில் உடுப்பிட்டியைச் சேர்ந்த பொதுமக்களும், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளும் விசனம் வெளியிட்டுள்ளனர். (ஒ-66)



## மாணவர்கள் மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 23

மிருசுவில், விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலயப் பிரதிநிதி அ. மனோரஞ்சன் பங்கேற்றார். (ச-9)

## கசிப்புக் காய்ச்சிய மூவர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ.23

நெல்லியடி, துன்னாலைப் பகுதியில் கசிப்புக் காய்ச்சிய பெண் ஒருவர் கடந்த புதன்கிழமை காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 3 லீற்றர் கசிப்பு , 16 லீற்றர் கோடா என்பன கைப்பற்றப்பட்டன. அதேபகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய குடும்பப் பெண்ணே கைதுசெய்யப்பட்டார்.

மேலும் இந்தச் சுற்றிவளைப்பின்போது நெல்லியடிப் பகுதியில் ஒன்றரை லீற்றர் கசிப்புடன் ஆணொருவர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபர்கள் சட்டநடவடிக்கைக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அதேவேளை புன்னாலைக்கட்டுவன் - ஈவினைப் பகுதியில் கசிப்புக் காய்ச்சிய குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார், காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பொலிஸாரால் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். இதன்போது 30 ஆயிரம் மில்லிலீற்றர் கோடா, கசிப்புக்காய்ச்சுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டன. கைதுசெய்யப்பட்டவர் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். (ச-23)

## அபிவிருத்தித் திட்டங்களை துரிதப்படுத்தப் பணிப்பு!

கொழும்பு, டிசெ.23

புதிய வரவு - செலவுத் திட்ட ஏற்பாடுகளின் கீழ் நாடளாவிய ரீதியில் அனைத்து அபிவிருத்தி நட வடிக்கைகளையும் துரிதப்படுத்தவேண்டும் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன அனைத்து ஆளுநர்களுக்கும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார். (எ-இ)

## பிரமிட் அமைப்புகளால் யாழிலும் பலர் ஏமாற்றம்

கொழும்பு, டிசெ. 23

தடைசெய்யப்பட்ட பிரமிட் அமைப்புகள் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றன. அவை கண்டறியப்பட்டு சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தவேண்டும் என்று சட்டமா அதிபரிடம் மத்திய வங்கி கோரிக்கை விடுத்துள்ளது. தடைசெய்யப்பட்ட பிரமிட் நிறுவனங்களுள் குளோபல் லைப் ஸ்டைல் லங்கா லிமிட்டெட் முதலிடம் வகிக்கிறது.

இந்த நிறுவனத்தின் வலையில் சிக்கி யாழ்ப்பாணத்திலும் பலர் ஏமாந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-6)

## போலி மருத்துவரை கட்டுப்படுத்துங்கள்!

நாட்டில் போலி மருத்துவர்கள் கண்டறியப்பட்டு சட்டநடவடிக்கைக்குட்படுத்தப்படவேண்டும் என்று மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சந்தித்த அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் இந்தக் கோரிக்கையை விடுத்தனர். (ச- 6)

## கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஜீப் மறைவு

கொழும்பு, டிசெ. 23

கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் (வயது - 66) கொழும்பு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரை கிழக்கு மாகாணத்தின் முதலாவது முஸ்லிம் முதலமைச்சராகப் பணியாற்றியிருந்தார். (ஒ-இ)

## வரியிறுப்பாளர்களுக்கு மாநகரசபை அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 23

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட 27 வட்டாரங்களுக்கான 2024ஆம் ஆண்டுக்குரிய ஆதன வரி அறிவித்தல்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன என்று யாழ். மாநகரசபையின் ஆணையாளர் இ.த.ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

வரியிறுப்பாளர்கள் தமது ஆதனங்களுக்கான ஆதனவரியை ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஜனவரி 31 ஆம் திகதிக்குள் செலுத்தி 10 வீதக் கழிவையும், காலாண்டுக்கான ஆதனவரியை அக்காலாண்டின் முதல் மாதத்தில் செலுத்தி 5 வீதக் கழிவையும் பெற்றுக்கொள்ளமுடியும்

வரியிறுப்பாளர்களின் நன்மைகருதி அலுவலக நாள்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3 மணிவரையும் வார இறுதி நாள்களிலும் பொதுவிடுமுறை தினங்களிலும் (பொங்கல் தினம் தவிர்த்து) காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணிவரையும் ஆதனவரியைச் செலுத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த ஆண்டுக்கான ஆதனவரி அறிவித்தல் கிடைக்கப்பெறாதவர்கள், இதற்கு முன்னைய ஆண்டுக்கான ஆதனவரி அறிவித்தல் அல்லது முன்பு ஆதனவரி செலுத்திய மைக்கான பற்றுச்சீட்டு அல்லது ஆதனம் அமைந்துள்ள வட்டாரம், வீதி மற்றும் ஆதன இலக்கம் போன்ற விவரங்களை சமர்ப்பித்தும் ஆதனவரியைச் செலுத்தமுடியும் என்றும் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ச)

## இதழ் வெளியீடும் மதிப்பளிப்பும்



கிளிநொச்சி, டிசெ. 23

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் 'பசுந்துளிர் இதழ் - 8' நூல் வெளியீடும் கலைஞர்கள் மற்றும் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான மதிப்பளிப்பு நிகழ்வும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. பிரதேச செயலரும் பிரதேச கலாசாரப் பேரவையின் தலைவருமான சி. ச. கிருஸ்ணேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட செயலக மேலதிக மாவட்டச் செயலர் ச. முரளிதரன் கலந்துகொண்டார். (ச-9)



## மன்னாரின் இளம்விமானி ஞானேந்திரன் லெக்சன்

மன்னார், டிசெ. 23

மன்னார் மாவட்டத்தின் இரண்டாவது இளம் விமானியாக நானாட்டானைச் சேர்ந்த ஞானேந்திரன் லெக்சன் தனது முதல் கட்டப் பயிற்சியை நிறைவுசெய்து சான்றிதழைப் பெற்றுள்ளார். கடந்த வருடம் கொழும்பு ரத்மலானை விமானப் பயிற்சிச் சேவையில் இணைந்து முதல் கட்டப் பயிற்சியை நிறைவு செய்துள்ளார். (ஒ-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த (24.11.2023) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

## அமரர் றாகினி தவேந்திரன்

அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு நாளை (24.12.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் **மீசாலை பரமேஸ்வரி மண்டபத்தில் (விக்கினேஸ்வரா பாடசாலைக்கு அருகாமையில்)** அன்னாரது ஞாபகார்த்தமாக ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அதனைத்தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**முக்கிய குறிப்பு:** எமது இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்போடு வேண்டுகின்றோம்

"உதயதாரகை"
மீசாலை மேற்கு, மீசாலை.

பரமேஸ்வரி மண்டபம்
டச்சு வீதி, மீசாலை மேற்கு, மீசாலை.

குடும்பத்தினர்
077 910 3340

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 12 . 1926



மறைவு 20 . 12 . 2023

## நல்லநாயகி நவரெட்ணம்

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லநாயகி நவரெட்ணம் கடந்த (20.12.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான தம்பு பாறுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற நவரெட்ணத்தின் அன்பு மனைவியும். செல்வராணி காலஞ்சென்ற லோகேஸ்வரன். செல்வராஜா (சுவிஸ்). காலஞ்சென்ற பஞ்சலிங்கம். புஸ்பராணி (சுவிஸ்). இந்திராணி (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர். வீதி. அபி. அதி. சபை. வவுனியா). கணேசலிங்கம் (ஓய்வுபெற்ற லிகிதர். வீதி. அபி. அதி. சபை - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும். காலஞ்சென்ற நடராஜா. தனேஸ்வரி. மோகனா (சுவிஸ்). விக்கினேஸ்வரி. சிவராஜா (சுவிஸ்). காலஞ்சென்ற மகேந்திரன். புவனேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை - செங்குந்தா - இந்துக்கல்லூரி). ஆகியோரின் அன்பு மாமியாரும். காலஞ்சென்ற மதியாபரணத்தின் மைத்துனியும். திலக்ஷன் (பாதுகாப்பு உத்தியோகத்தர். அரச முதலீட்டு வங்கி - யாழ்ப்பாணம்). பிறேமதாஸ் (பிரான்ஸ்). பிறேம்குமார் (பிரான்ஸ்). பிறேம்நாத் (லண்டன்). சிந்துஷா. வர்ஷா (சுவிஸ்). வருண் (சுவிஸ்). வனஜா. கபிலன். கஜந்தன் (முகாமைத்துவ உத்தியோகத்தர் கைத்தொழில் அபிவிருத்திச் சபை தலைமைக்காரியாலயம் - கொழும்பு). ஷாளினி (சுவிஸ்). Dr.கிரிஷாந் (யாழ்.போதனா வைத்திய சாலை). சௌமியா (போசாக்கு நிபுணர். ஆசிரி சத்திரசிகிச்சை வைத்தியசாலை. கொழும்பு). மாதுளன் ஆகியோரின் அன்புப் பேத்தியும். அகில வேங்கை. அட்ஷய வேங்கை. அகினஜா. அன்னஜா. கரணி (பிரான்ஸ்). சுபிட்ஷா (பிரான்ஸ்). அஸ்வினி (பிரான்ஸ்). நிச்சிதா (பிரான்ஸ்). ரித்திகா (பிரான்ஸ்). கேசிகா (பிரான்ஸ்). ஆயிஷா (சுவிஸ்). அருண் (சுவிஸ்). விருக்சாஜி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.12.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கந்தர்மடத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

17/1, பிறவுண் வீதி,
2 ஆம் ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(cs27408) (CS) N-1

தகவல்:
குடும்பத்தினர்
077 698 4943

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 . 09 . 1935



மறைவு 22 . 12 . 2019

## தில்லையம்பலம் அன்னபூரணம்

(பேபி அம்மா)

திதி: (23.12.2023)

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
நான்கு ஆண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!

இல 190/2A, குளவீதி,
பட்டக்காடு.


(cs.53241) (N.1)

தில்லையம்பலம்
குடும்பத்தினர்

# பதின்மூன்றாவது ஆண்டு நினைவஞ்சலி

23.12.2023

தோற்றம் 25 . 12 . 1935



மறைவு 07 . 01 . 2009

## அமரர் ஆண்டி முருகையா

திதி: சுவர்க்கவாயில் ஏகாதசி

நெஞ்சத்தின் நினைவாய் நிலையாய் என்றும்
எங்களோடு எங்களின் இறைவனாய் என்றும்
எங்களை வழிநடத்த வணங்குகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கும்...

தியேட்டர் லேன்,
இணுவில் கிழக்கு.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(CS 53231) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறுகை அறிவித்தல்
## துணுக்காய் பிரதேச சபை – முல்லைத்தீவு
## தனியார் பாதுகாப்புச் சேவை – 2024

01. துணுக்காய் பிரதேச சபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட சேவைக்காக கேள்வி கோரப்படுகின்றன.
02. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், துணுக்காய் பிரதேச சபை, முல்லைத்தீவு தொலைபேசி **0212284926, 0212284532** தொலைநகல் **0212283478 E.mail: psthunukkai @gmail.com** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் 28.12.2023 இல் இருந்து காலை 9.00 மணி முதல் மாலை 02.00மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
03. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் செயலாளர், துணுக்காய் பிரதேச சபை, முல்லைத்தீவு எனும் இடத்திலிருந்து 28.12.2023ஆம் திகதியிலிருந்து 05.01.2024 வரை வேலை நாட்களில் காலை 09.00 மணிக்கும் மாலை 02.30 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 3000.00 (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்பட வேண்டும்.
04. கேள்வி ஆவணங்கள் தலைவர், உள்ளூர் அதிகார பெறுகைச் சபை, துணுக்காய் பிரதேச சபை, முல்லைத்தீவு எனும் முகவரிக்கு 05.01.2024ம் திகதி மாலை 02.30மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
05. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.
06. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிக்க அல்லது மீள் கேள்வி கோர பெறுகைக் குழுவிற்கு அதிகாரம் உண்டு.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | ஒப்பந்த காலம் | பிணை வைப்பு | பிணை வைப்பு செல்லுபடியாகும் காலம் | தேவையான ஆளணி எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | இரவு | பகல் |
| 01 | NP/14/44(5) 02/03/ Sec.Ser/2023 | பாதுகாப்பு சேவை | 1வருடம் | 10,000.00 | 05.01.2024 – 19.04.2024 | 01 | 01 |

23.12.2023

தலைவர்
உள்ளூர் அதிகார
பெறுகைச்சபை
துணுக்காய் பிரதேசசபை
முல்லைத்தீவு

## திலீபனுக்கு அஞ்சலிப்பு; சிங்கள அமைப்பு வழக்கு

திலீபனை அஞ்சலித்தமைக்காக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று பிவிதுறு ஹெல உறுமய கட்சி உறுப்பினர் அஞ்சன சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

கஜேந்திரனுக்கு எதிராக செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி அவர் பொலிஸ் முறைப்பாடு ஒன்றை வழங்கியுள்ளார். இதையடுத்தே இது விடயத்தில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-6)

## நல்லூர்க் கந்தன் திருமண சேவை

அன்பார்ந்த உறவுகளுக்கு எமது புது வருட வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். எம்மிடம் சகல மணமக்களுக்கும் உள்நாடு, வெளிநாடு, உத்தியோகம், உத்தியோகம் அல்லாதது எல்லா மணமக்களுக்கும் வரன்கள் உண்டு .
தொடர்புகொள்ளவும்.

வி.ஜெயந்தி
தொடர்பு : 077 973 3183

(CS 27440) J-1

## உளம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்




யாழ்ப்பாண மாவட்டத்தில்
மத்தியஸ்த சபைகளின் பயிற்சி
உத்தியோகத்தராகப்
பணி புரிந்து வரும்


**திரு.பரமானந்தக் குருக்கள் ஜனாதன சர்மா**

அவர்கள் அண்மையில் கொழும்பு
பண்டாரநாயக்கா ஞாபகார்த்த
சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில்
இடம்பெற்ற பட்டமளிப்பு
விழாவில் சட்டமாணிப் பட்டம்
பெற்றமையிட்டு அவர்களுக்கு
எமது வாழ்த்துக்களையும்,
பாராட்டுதலையும் தெரிவிப்பதுடன்
மென்மேலும் அவர் தமது
சேவையில் உயர்வு பெற
வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்:
மத்தியஸ்த சபை உறுப்பினர்கள் - சாவகச்சேரி.

# 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் இராமச்சந்திரன் சிவகுமார்
### (சிவா / மைந்தன்)

திதி : பூர்வபக்க ஏகாதசி [23.12.2023]

அன்னை மடியில்
06.08.1971

ஆண்டவன் அடியில்
24.12.2012

பத்து மாதம் சுமந்து பெற்றவள்
நான் இங்கே தினம் தோறும்
கதறுகின்றேன்... மகனே!
நீண்ட தூரம் சென்று விட்டாயே!

என் அருமை காவலனே!
அருகில் இருப்பதாக கரம் பிடித்தாயே
கண்காணா தேசம் பிரிந்து சென்று விட்டாயே!

அப்பா உன் முகம் தேடியலைகின்றேன்
என்னைப் பரிதவிக்கவிட்டு எங்கே
அப்பா சென்று விட்டாய் ஆசை மகள்
தனியொருத்தி கதறுகிறேன்
ஆறுதல் தாவனப்பா!

அண்ணா என்றழைக்க தகுதியில்லாத
இளையவர் நாம் கதறுகிறோம்
எங்கே அண்ணா சென்று விட்டீர்

சுற்றம் சூழ உற்றார் உறவினர்
நாம் கதறி அழுகின்றோம்
பதினொரு ஆண்டுகள் சென்று விட்டதே...
உன் பால் முகம் தேடுகின்றோம்
ஆறவில்லை எங்கள் மனம்

**உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை அனுதினம் பிரார்த்திக்கின்றோம்.**

**ஓம் சாந்தி... ஓம் சாந்தி... ஓம் சாந்தி...**

**12/02, தொட்டியடி, விசுவமடு.** (CS 25681)(k-1) **குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 21.06.1942

இறப்பு 22.12.2023

## திருமதி செல்வரட்ணம் ருக்மணி (றுக்கான்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடா, கொழும்பு, வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்வரட்ணம் ருக்மணி அவர்கள் நேற்று (22.12.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா, மணி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்வரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பெரிய தம்பி செல்லமுத்துவின் அன்பு மருமகளும், மனோகர், மோகனசுந்தர், காஞ்சனா, சேகர் (கனடா), மகேந்திரன் (கனடா), டக்ஷினி, சதீஸ்குமார் (லிபியா), ரவிசங்கர் (கனடா), புவிரஞ்சனி, செல்வகுமார் ஆகியோரின் பாசமிகு தாயும், சியாமளா, வளர்மதி, நகுலேஸ்வரன், கமலேஸ்வரி, கௌசலா, மதிவண்ணன், மஞ்சுளா, துசிமளா ரஞ்சன், சுதா, ஆகியோரின் பாசமிகு மாமியும், வினோபாஜி, சங்கீதா, கயல்விழி, பிரதீபன், ஜெனிதா, கஜித்ரி, சௌதமன், லோஜனா, சஞ்சீகா, நேருசன், சஜீவ், சந்துசன், மிதுசனா, பிரசாந்த், லக்சிகரன், சஜீவன், நிருஷாந், கிரிஷிகா, கிஷாந், யதுசனா, கவிசனன் ஆகியோரின் பேத்தியும் துஷாந்தன், டினுஷா, லதுசன், துலக்சன், அட்சரன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 80/11 , பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அன்னாரின் இல்லத்தில் நாளை (24.12.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10:30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

சேகர் :- 0019057816263
மகேந்திரன் :- 0014168067255
சதீஷ்குமார் :- 0094774933604
ரவிசங்கர் :- 0019057821405
செல்வகுமார் :- 0094770021001

**தகவல்**
**குடும்பத்தினர்**

(CS 49994) (K-1)

## காரை மண்ணின் மைந்தன்
## அமரர் S.V. முருகேசு அவர்களின்
# நூற்றாண்டு நினைவுகள்



காரை மண்ணின் முதன்மை மைந்தன்
அமரர் எஸ்.வி.முருகேசு மகான்
அல்லல்படும் மக்களுக்கு அருங்கொடையளித்து
வணிகத்தினரோடு ஒப்புரவு கொண்ட பண்பாளன்.

வாணிபஞ் செய்தலை செப்பனே செய்ததால்
வானளாவ உயர்ந்து சாதித்த சாதனைத் தமிழன்
“பண்போடு பேசு புண்பட பேசாதே”
என்ற வாசகங்கள் வணிக நிலையத்தில் தொங்கும்.

நெருக்கடியான காலமதில் பண்டங்களை
பரிவுடனே மக்களுக்கு நியாயமான விலையில்
பகிர்ந்தளித்து தமிழினத்தின் அல்லல் போக்கிய மகானே
கடமையைக் கண்ணியமாய் வாழ்ந்து காட்டிய ஐயா,

உயர்வு தாழ்வு பாராது சகலரோடும்
ஒன்றித்து வாழ்ந்தமையால் எம்மனதில்
இன்றும் நிலைத்து நிற்கின்றீர் ஐயா
உங்கள் தடங்களே எங்களின் படிக்கட்டுக்கள்.

நியூ சரவணாஸ் பல்பொருள் வாணிபம்
இல 03, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(CS 27433) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 அடி கிறிஸ்மஸ் மரம் வன்னி மண்ணில் திறப்பு


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சர்வதேச தொழில்சார் அனைத்துலக
விருது வழங்கும் அமைப்பின்

விருது வழங்கும் நிகழ்வு 15.12.2023
அன்று சைருண் றெஸ்ரோறன்ற், டோகா
கட்டாரில் நடைபெற்ற வேளை
யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்த
பிரபல சமூக சேவையாளரும், கல்விக்
கொடையாளருமாகிய



**கலாநிதி இராசையா குவேந்திரநாதன்**



அவர்களின் தன்னலமற்ற சமய, சமூக பணிகளிற்காக **நன்மதிப்பு மிக்க சாதனையாளர் விருது** கலாநிதி எச்.எம்.அப்துல் ஹாய் அவர்களால் வழங்கப்பட்டு திரு.இ. குவேந்திரநாதன் சார்பாக கலாநிதி எம்.எம்.சாரிக் அவர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டமையை நாமும் பாராட்டுவதோடு அவரது சமூகசேவை மென்மேலும் தொடர நாமும் வாழ்த்துகின்றோம்.

Congratulations

உரிமையாளரும், ஊழியர்களும்
சிறி மீனாட்சி நகை அகம்
177B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(CR 41371) S-1


உடையார்கட்டு புனித யூதாததேயு ஆலயத்தின் ஏற்பாட்டில், கிறிஸ்து பிறப்பை கொண்டாடும் விதமாகவும் ஆலய கட்டுமான பணிக்கு நிதி சேர்க்கும் வகையிலும் வன்னி மண்ணில் முதல் தடவையாக 50 அடி உயரம் கொண்ட பிரமாண்ட கிறிஸ்மஸ் மரம் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

இன்று மாலை 7 மணிக்கு யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி பி. ஜோ.ஜெபரட்ணம் அடிகளாரால் இந்த கிறிஸ்மஸ் மரம்திறந்துவைக்கப்படவுள்ளது. தொடர்ந்து கரோல் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ம)

## பெண்ணொருவரின் சங்கிலி அறுப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 23

வடமராட்சி,வதிரி பகுதியில் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த பெண் ஒருவரின் ஒன்றே முக்கால் பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலி அறுத்துச் செல்லப்பட்டுள்ளது என நெல்லியடிப் பொலிஸாரிடம் நேற்று முறையிடப்பட்டுள்ளது.

வதிரி உள்ளிய நெல்லை அம்மன் வீதியால் பெண் ஒருவர் நடந்து சென்று கொண்டிருந்தபோது பின்னால் துவிச்சக்கரவண்டியில் வந்த இளைஞன் பெண்ணின் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளான். சம்பவம் தொடர்பில் நெல்லியடிபொலிஸார்விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-100)

## திருநெல்வேலியில் கூடிய மழைவீழ்ச்சி

யாழ்ப்பாணம், டிசெ. 23

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் திருநெல்வேலிப் பகுதியில் கூடியளவு மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி வரையிலான 24 மணிநேரத்தைக் கருத்திற்கொண்டே இந்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, அதிகூடிய மழைவீழ்ச்சியாகத் திருநெல்வேலியில் 75.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் திருநெல்வேலி வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார். யாழ். நகரத்தில் 53.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், அச்சுவேலியில் 48.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், யாழ்ப்பாணம் கோட்டையில் 36.6 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், வடமராட்சி அம்பனில் 36.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், நயினாதீவில் 34.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளன எனவும் அவர் தெரிவித்தார். (ம-66)


விண்ணக வாழ்வில் இறைவனுடன்

38ஆம் ஆண்டு 7ஆம் ஆண்டு





நெடுந்தீவு மேற்கு

அமரர் முருகப்பர் கந்தையா
மண்ணில் 16.12.1921 விண்ணில் 03.09.1985
திதி: ஆவணி அபரபக்க சதுர்த்தி

அமரர் காமாட்சி கந்தையா
மண்ணில் 15.07.1931 விண்ணில் 10.12.2016
திதி: கார்த்திகை பூர்வபக்க துவாதசி

எப்படி கதறி அழுதாலும் சரி
எவ்வளவு கோடி கொடுத்தாலும் சரி
திரும்பக் கிடைக்காத நாட்கள்
நாம் தாய் தந்தையுடன் சந்தோஷமாக
வாழ்ந்த நாட்கள் தான்
நன்றி அப்பா, அம்மா.

இல.10, பாரதிசனசமூக நிலைய முன் வீதி,
உயரப்புலம், ஆனைக்கோட்டை.

என்றும் உங்கள் நினைவுகளோடு உங்கள்
பிள்ளைகள்


## ஒளிவிழா

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கப்பலேந்தி மாதா ஆலய ஒளி விழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. மாணவர்களின் கலை நிகழ்வுகள் பரிசில் வழங்கல் என்பனவும் நடைபெற்றன. (ரி-27)



## சத்துணவைப் பெறும் வழிமுறை மாணவருக்குப் புகட்டவேண்டும்!

தென்மராட்சி வலயக்
கல்விப் பணிப்பாளர் அறிவுரை

யாழ்ப்பாணம் டிசெ.23

மாணவர்கள் மத்தியில் விவசாயம்சார் உற்பத்திச் செயற்றிறனை ஊக்குவிப்பதனூடாக அவர்கள் தீயவழியில் பாதை மாறிச் செல்வதைத் தடுத்து நிறுத்தமுடியும். பொருளாதார நெருக்கடியால் சத்துணவைப் பெற்றுக்கொள்வதிலுள்ள இடர் நிலையையும் தவிர்ப்பதற்கு ஏதுசக்தியாக அமையும் -இவ்வாறு அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயத்தின் தொழில்முனைவுடன் கூடிய பாடசாலைத் தோட்ட விவசாயக் கண்காட்சியில் அதிதியாகப் பங்கேற்று உரையாற்றுகையில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தெரிவித்தார். (ச-159)


## மரண அறிவித்தல்

### கந்தையா நடராஜா



யாழ். மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், பரந்தன் 3ம் வாய்க்கால், கனடா Brampton ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா நடராஜா அவர்கள் 19.12.2023 செவ்வாய்க்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா சிவக்கொழுந்து தம்பதிகளின் ஏகபுத்திரரும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் நாகாத்தைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், தையல்நாயகி அவர்களின் பாசமிகு கணவரும், தவபாலன் (தவா-Centra Street Deli), வதனி(வதனா), கஜபாலன் (கஜன்), காலஞ்சென்ற ஜெனனி (ஜெனா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பால கௌரி (ஜமுனா), உதயகுமார்(குமார்-Home Life Future Realtor), சர்மிளா ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிஷா, அஷ்விதா, சுபீதன், சுவேதா, ஜெனதன், லினோவா ஆகியோரின் அன்புப் பேரனும், அன்னலட்சுமி, காலஞ்சென்ற நித்தியலட்சுமி, ஞானதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சண்முகசாமி, விஜயராமன், தியாகராஜா, சபாரத்தினம், கைலாயபிள்ளை, சுப்பிரமணியம், குமாரசாமி, குணநாயகி மற்றும் கதிரவேலு, யோகம்மா, பொன்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.12.2023) ஞாயிற்றுக்கிழமை 30 Bramwin Ct, Brampton, ON L6T 5G2, Canada இல் பார்வைக்காக வைக்கப்பட்டு, தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

புகையிரத நிலைய வீதி,
மல்லாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 17442) A-1



## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 06.03.1950



உதிர்வு 24.11.2023

கடந்த 24.11.2023 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**திருமதி ஜெயமணி துரைராஜா**

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை)

"அம்மா கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எம் முன்னே உன் முகம் எந்நாளும் உயிர்வாழும்"

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (24.12.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அன்றைய ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் குடும்பம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

சன்னதி வீதி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

குடும்பத்தினர்.

(CR 41368) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் தேவை

## மஹிந்த தேசப்பிரிய வலியுறுத்து

மாகாணசபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் தேவை என முன்னாள் தேர்தல் ஆணையாளரும், எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவருமான மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனநாயக நாடு என்ற அடிப்படையில் மாகாணசபை நாட்டுக்கு அவசியம். மாகாணசபை இந்த நாட்டுக்கு அவசியமில்லை என யாராவது குறிப்பிடுவார்களாயின் ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையின் தேவையும் இங்கு இல்லை.

தற்போது மாகாணசபை மக்கள் கூட்டிணைப்பற்ற அரச அதிகாரிகளால் செயற்படுத்தப்படுகின்றது. இதனால் மாகாணசபை குறித்தான கேள்வியொன்றை எழுப்பும்போது அரச அதிகாரிகள் அதற்கு நேரடியாகப் பொறுப்பேற்காமல் இருக்கின்றனர். மக்கள் பிரதிநிதிகள் இருந்தால் இந்நிலை மாற்றமடைந்திருக்கும். தற்போது மாகாணசபை செயற்றிட்டங்களில் மக்கள் கருத்துகளைக் கேட்டறிய வாய்ப்பு இல்லை. எனவே மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளைத் தெரிவு செய்தலை உடன் மேற்கொள்ள வேண்டும். அனேகமானோர் மாகாணசபை வெள்ளை யானை என தெரிவித்து வருவதுடன், மாகாணசபை உறுப்பினர்களை பராமரிக்க அதிக நிதி வீண்டிக்கப்படுவதாகக் கூறி மக்களை ஏமாற்றுகின்றனர். அவர்களின் பராமரிப்புக்கு அரச வருமானத்தில் ஒரு வீதமளவே செலவாகுகின்றது - என்றார். (ம-110-18)

---

### குற்றச்செயல்கள்...

நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் பொலிஸாரால் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் போதைப் பொருள் மற்றும் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய பலர் கடந்த சில நாள்களில் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த சில நாள்களில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பில் யாழ்ப்பாணப் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விஷாந்த தெரிவித்ததாவது:-

கடந்தசிலநாள்களில்மட்டும்ஹெரோய்ன் வைத்திருந்த குற்றச்சாட்டில் 27 பேரும், ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 4 பேரும், கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 30 பேரும், போதை மாத்திரைகள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 27 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 20 பேர் போதைக்கு அடிமையானவர்கள் என்பது கண்டறியப்பட்டுள்ள நிலையில், அவர்களை மறுவாழ்வு மையத்துக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

போதைப்பொருள் தொடர்பான கைதுகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், மாவட்டத்தில் ஏனைய குற்றச்செயல்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. பெரும்பாலான குற்றச்செயல்கள் போதைக்கு அடிமையானவர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. பொலிஸாரின் இந்தக் கைது நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெறும். யாழ். மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் - என்றார். (அ-எ-26)

### 2024 இலும்...

எதிர்வரும் ஏப்ரல் மாதம் பூகோளத்தின் வெப்பநிலை உச்சம்பெறும் என்றும் உலக வானிலை அமைப்பு எச்சரித்துள்ளது.

**எல்- நினோ என்றால் என்ன?**

எல் நினோ என்பது உலகம் முழுவதும் பரவலாகப் பல்வேறு பகுதிகளிலும் வெப்பநிலையை உயரச் செய்யும் ஒரு வகை காலநிலை நிகழ்வு. பசுபிக் கடல் பரப்பில் ஏற்படும் வெப்பநிலை அதிகரிப்புதான் 'எல்-நினோ' என்று விஞ்ஞானிகள் விளக்கம் தருகின்றனர்.

2023ஆம் ஆண்டு உலகளவில் எல்-நினோ ஆண்டாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. இதனால்தான் இந்த வருடம் உலகளாவிய ரீதியில் அதீத வறட்சியும் இப்போது அளவுக்கதிகமான மழையும் ஏற்பட்டு மக்களை வாட்டிக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் அடுத்த ஆண்டும் எல்-நினோ ஆண்டாக இருக்கும் என்று உலக வானிலை அமைப்பு எச்சரித்துள்ளது. குறிப்பாக ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் கடும் வறட்சி ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தொடர் கதையா?**

இந்த ஆண்டு எல்-நினோவால் 3 ட்ரில்லியன் டொலர் அளவுக்குப் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது என்று ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், அடுத்த ஆண்டும் எல்-நினோவின் தாக்கம் தொடர்வதால் பொருளாதாரப் பாதிப்பு மேலும் நீடிக்கும். ஜனவரி மாதம் முதல் இலங்கையில் வரி விதிப்பால் பொருள்களில் விலை ஒரு சுழற்சி உயரவுள்ள நிலையில், எல்-நினோ ஏற்படுத்தப்போகும் பேரழிவு மக்களை நேரடியாக வதைக்கும். ஆதலால், இலங்கையில் அடுத்த வருடம் பொருளாதாரப் பேரிடர் நிலை ஏற்படும் என்று நிபுணர்கள் கணித்துள்ளனர். (அ-ம)

### இரண்டு...

வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து யாழ். மாவட்டத்தில் பண மோசடி செய்யும் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெறும் நிலையில், பலர் பலகோடி ரூபாவை இழந்துள்ளனர். இது தொடர்பாக முன்னைய காலங்களிலும் பல முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், இவ்வாறான மோசடிகளில் சிக்கிக்கொள்ளவேண்டாம் என்று பொலிஸார் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

ஆயினும், தற்போதும் இவ்வாறான மோசடிகள் யாழ்.மாவட்டத்தில் நடக்கின்றன. வெளிநாடு செல்லும் ஆசையால், ஏமாற்றுப் பேர்வழிகளை நம்பி மக்கள் பெரும் தொகையான பணத்தை இழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த இரு வாரங்களில் மட்டும் இவ்வாறான 10 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொருவரும் பல இலட்சங்களை இழந்துள்ள நிலையில், அதன் மொத்தப் பெறுமதி இரண்டரைக் கோடி ரூபாவுக்கும் அதிகம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக யாழ்ப்பாணப் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விஷாந்த தெரிவித்ததாவது:-

சமூக வலைத்தளங்களில் வெளியாகும் விளம்பரங்களை நம்பியே பெருமளவானோர் பணத்தை இழந்துள்ளனர். கனடா மற்றும் வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகவே அந்த விளம்பரங்கள் காணப்படுகின்றன. இவ்வாறான விளம்பரங்களை நம்பி பணத்தைக் கொடுத்து ஏமாற வேண்டாம் என்று நாம் தொடர்ச்சியாக எச்சரித்து வருகின்றோம். பொதுமக்களின் ஆசையைப் பயன்படுத்தி இவ்வாறான மோசடிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. பொதுமக்கள் இவ்வாறான ஏமாற்று நடவடிக்கைகள் தொடர்பான விழிப்புடன் இருக்கவேண்டும் - என்றார். (அ-எ-26)

### உண்மை,...

உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு தென்னாபிரிக்காவில் சிறந்த முறையில் செயற்பட்டது, வெற்றியளித்தது என்று தெரிவிக்கின்றார்கள். அந்த நாட்டில் சிறுபான்மை மக்கள்தான் உண்மைக்கும் நல்லிணக்கத்துமான ஆணைக்குழு வெற்றிபெறுவதற்குக் காரணமாக இருந்தனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்கள் முன்னின்று நீதியை வழங்கினார்கள். ஆனால், இங்கு பாதிப்புகளை மேற்கொண்ட தரப்பே நீதி வழங்கக் காத்திருக்கின்றது. இது அடிப்படையிலேயே தவறானது. ஆதலால் இந்தத் திட்டம் காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்துக்குத் தீர்வாக அமையாது. காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில் விவாதிக்கப்பட வேண்டிய எம்முடன் விவாதிக்காமல் கொண்டுவரப்படும் எந்தத் திட்டங்களையும் நாம் ஏற்கமாட்டோம். குறிப்பாக எந்தச் சிங்கள ஜனாதிபதியும் எங்களுக்குத் தீர்வைத் தரப்போவதில்லை. போர்க்குற்றங்களைச் செய்தோர் அதுசார் விசாரணைகளை நடத்தமுடியாது. எமக்குரிய தீர்வு சர்வதேசத்தின் பாற்பட்டதாகவே அமைய வேண்டும் - என்றார். (அ-ம)

### ஆட்கடத்தல்...

வயதான நபரொருவரைக் கடத்திச் சென்றுள்ளனர் என்று கோப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் மேற்படி இருவரையும் கைது செய்து நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர். இதையடுத்தே அவர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. குறித்த இளைஞர்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து பணமோசடியில் ஈடுபட்டதையடுத்தே தாம் அவரைக் கடத்தினர் என்று சந்தேகநபர்கள் முதற்கட்ட விசாரணைகளில் தெரிவித்துள்ளனர். (அ-ம-125)

### இலங்கைக்குள்...

குள் ஏற்கனவே ஊடுருவியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதாக ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் உயிரியல் துறையின் பணிப்பாளர் மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

லக்சம்பேர்க்கில் முதன்முதலில் கண்டறியப்பட்ட கொரோனாத் திரிபு ஜே.என்.1 இந்தியாவில் தற்போது அதி தீவிரமாகப் பரவி வருகின்றது. உலகளவில் இந்தத் திரிபு இப்போது ஆபத்தானதாகக் கருதப்படுகின்றது. இந்த நிலையில், இந்தத் திரிபு தற்போது இலங்கைக்குள் ஊடுருவியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. காய்ச்சல், இருமல், வாசனை மற்றும் சுவை இழப்பு, அதிக காய்ச்சல், சுவாசிப்பதில் சிரமம், சாப்பிடுவதில் சிரமம் மற்றும் வாந்தி உள்ளிட்ட அறிகுறிகள் இருப்பவர்கள் மருத்துவ ஆலோசனையை விரைந்து பெறுவது நல்லது - என்றார். (அ-ம)

### போலி...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தக் காணொலியை நாம் அவதானித்தோம். அது தயாரிக்கப்பட்டதொன்று என்பது தெரியும். பயங்கரவாத விசாரணைப் பிரிவும், குற்ற விசாரணைப்பிரிவும் இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கின்றன. இவ்வாறான விடயங்களை வெளியிடுபவர்களை நிச்சயம் தேடிக் கண்டுபிடிப்போம். அவர்களை நிச்சயம் கைது செய்வோம்' - என்றார். (அ-ம-44)

### பிரதேச...

திருமதி சுபாஜினி மதியழகன் சண்டிலிப்பாய் பிரதேச செயலராகவும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி யசோதார உதயகுமார் நல்லூர் பிரதேச செயலராகவும் இடமாற்றப்பட்டுள்ளனர்.

தெல்லிப்பழை பிரதேச செயலராக சிவகெங்காதரன் நியமிக்கப்பட்டுள்ளார். பருத்தித்துறை பிரதேச செயலராக கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னாள் மேலதிக மாவட்டச் செயலர் எஸ்.சத்தியசீலன் நியமிக்கப்பட்டுள்ளார். பாண்டியன்குளம் பிரதேச செயலர் திருமதி நிரஞ்சனா, காரைநகர் பிரதேச செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கரைச்சி பிரதேச செயலர் எஸ்.ஜெயகரன் உடுவில் பிரதேச செயலராகவும், உடுவில் பிரதேச செயலர் முகுந்தன் கரைச்சி பிரதேச செயலராகவும் இடமாற்றப்பட்டுள்ளனர். யாழ். மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன் பளை பிரதேச செயலராக இடமாற்றப்பட்டுள்ளார். (அ-ஒ-5)

### யாழ்ப்பாணத்தில்...

இதேவேளை - யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மரக்கறிச் செய்கையிலும் கணிசமான அழிவு பதிவாகியுள்ளது. இதன்படி 9.125 ஏக்கரில் செய்கை பண்ணப்பட்ட மரக்கறிகள் அழிவடைந்துள்ளன. உச்சபட்சமாக சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 8.875 ஏக்கர் மரக்கறிகள் அழிவடைந்துள்ளன - என்றார். (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞருடன் சென்ற பெண்ணே சடலமாக மீட்பு

இளைஞருடன் சென்ற இளம் பெண்ணே பாவற்குளத்தில் மூழ்கி உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று புதிய தகவல் வெளியாகியுள்ளது.

பாவற்குளம் நீர்த்தேக்கமானது வான்பாய்ந்து வரும் நிலையில் இளைஞர் ஒருவருடன் இளம் பெண் அங்கு சென்றுள்ளார். இளம் பெண் நீரில் வீழ்ந்துள்ளார். சிலர் உடனடியாக விரைந்து செயற்பட்டு அவரை மீட்டு, பாவற்குளம் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். அங்கு கொண்டு செல்லும் முன்னரே அவர் உயிரிழந்துள்ளார் என்றுதெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் சடலத்தைப் பார்வையிட்ட வவுனியா பதில் நீதிவான் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டார். இளம்பெண்ணின் உயிரிழப்பானது நீரில் மூழ்கியமையால் ஏற்பட்டது எனத் தெரிவித்ததுடன், உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் சடலத்தை பெற்றோரிடம் ஒப்படைக்கக் கட்டளையிட்டார்.

(ஒ-18)


## ஆடு விற்பனைக்கு

நல்ல சணல் இன
(சினைப்பட்டது) ஆடு
தாவடியில் விற்பனைக்குண்டு.

077 605 9613

## விவசாயிகளுக்கு

இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட உழவு இயந்திரத்தில் (Tractor) பொருத்தக் கூடியவாறான சகல விதமான விவசாய கலப்பைகளும் எம்மிடம் நியாயமான விலையில் உத்தர வாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.



### ஆர்க் . என் . கம்பனி

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9, வீதி, எழுதுமட்டுவாள். 070 191 3571
- A9, வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 973 9917

## சிறிராம் ஜுவல்லர்ஸ்

இல.158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஆண்டு இறுதியை முன்னிட்டு
தங்க ஆபரணங்களுக்கான
மாபெரும் விலைத் தள்ளுபடி



* செய்கூலி சேதாரமின்றி ஆபரணங்கள் வழங்கப்படும்.
* அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் 01.01.2024 வரையும் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.

ஒருமுறை வந்து பாருங்கள்
ஒத்துக்கொள்வீர்கள்.

* அனைத்து ஆபரணங்களுக்கும் தரச்சான்றிதழ்கள் வழங்கப்படும்.
* தங்கத்தின் அன்றைய நாள் விலை நிலவரத்தின்படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும்.

தொடர்புக்கு: 077 165 1729, 077 773 0567, 021 222 8334

## மணமகள் தேவை

01. யாழ்ப்பாணம், இந்து, கௌரவகுலம் (V), 1984, சுவாதி, BSc, Business Managment, UK, மணமகனுக்கு மணமகள் தேவை.
02. மீசாலை, இந்து, கௌரவகுலம் (V), 1988, சதயம், MSc Engineering, UK, மணமகனுக்கு மணமகள் தேவை.
03. திருகோணமலை, இந்து, கௌரவகுலம் (V), 1984, ரேவதி, Qualified Drafstman, Vegetarian, மணமகனுக்கு மணமகள் தேவை.
04. கரம்பன் - Jaffna Town, இந்து, கௌரவகுலம், (V), 1988, ரோகிணி, BSc, Engineering, கனடா, மணமகனுக்கு மணமகள் தேவை.
05. மண்டைதீவு, இந்து, கௌரவகுலம், (V), 1989, மூலம் , MBBS Doctor, மணமகனுக்கு மணமகள் தேவை.
06. கோண்டாவில், இந்து, கௌரவகுலம், (V), 1990, ரேவதி, Phd in Engineering, Australia, மணமகனுக்கு மணமகள் தேவை.
07. தெல்லிப்பளை, இந்து, கௌரவகுலம் (V), 1988, உத்தரம், BSc Engineering, USA, மணமகனுக்கு மணமகள் தேவை.
08. தெல்லிப்பளை, இந்து, கௌரவகுலம் (V), 1987, புனர்பூசம், BSc Engineering (Civil), Singapore Citizen, Vegetarian மணமகனுக்கு மணமகள் தேவை.

S.Sharma J.P Astrologer
Phone - 077 539 3728
Whatsapp - 077 803 8193

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 33 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

* 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
* நிலப்பரப்பு, நன்னீரூற்று
* 20 அடிப்பாதையுடன்
* சித்த மருத்துவமனைக்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
* யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
* நல்ல சூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணி
* நன்னீர் ஊற்று நிலம்
* தரகர் தேவையில்லை.
* பார்வையிடும் நேரம்: காலை 6.00 - மாலை 6.00 மணிவரை.

தொடர்பு: 077 468 3354
071 173 3911

(CS 53252) A-1


## முதலாம் ஆண்டு நினைவு நாள்



### சிவசுந்தரம் வர்ஷனன்

(Dip in Civil Engineering)



வர்ஷனன் எங்கள் வாழ்வின் விடியல்
வளர் நிலவாகி வாண்மைகள் பெற்றோன்
கல்வியும் கலைகளும் நிலையெனப் பெற்று
சொல்லிலும் செயலிலும் சோர் விலனாகி
இன்பமாய் எங்கள் இதயத்துள் இருந்தோன்
இருபத்து நான்கில் இன்னுயிர் விட்டு
இறைபதம் அடைந்து ஆண்டொன்றாகியும்
ஆறாத்துயரில் அமிழ்ந்தே போனோம்.

"வர்ஷமஹால்"
23, உடுவில் வீதி,
மானிப்பாய்.


பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அக்கா
மற்றும் உறவினர்கள்.

(cs 53103) (N.1)

## விண்ணக வாழ்வின் ஓராம் மாத நினைவஞ்சலி

நீண்ட நெடுங்காலம் (101) நிகரில்லா வாழ்வு வாழ்ந்து
பெரியதொரு வம்சத்தை உருவாக்கி வழிகாட்டி
உயர்த்திவிட்ட எம் குடும்பத்தலைவர் **அமரர் உயர்தகு மனுவேற்பிள்ளை அந்தோனிப்பிள்ளை** அவர்களை
அவர் இறைவனுட் கலந்த
ஓராம் மாதம் நினைவுகூர்வோம்!

தாய்மடி
23 . 08 . 1922



இறை அடி
15 . 11 . 2023

அமரர்

### மனுவேற்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

(முன்னாள் இயந்திர இயக்குநர், ஒப்புநோக்குநர் - ஆனந்தா அச்சகம்)

நூற்றி ஒரு ஆண்டுகளாய் நாற்றிசையும் கிளைபரப்பி
ஆற்றலுறு மனைமக்கள் மருமக்கள் பேரரென
வீற்றிருந்த மடியதனை வெற்றிடமாய் ஆக்கிவிட்டு
காற்றிடையே கலந்திறையுட் கலந்திட்ட எங்கள்
போற்றுதற்குரிய ஆனந்தா அச்சகப் பல்துறைப் பணியாளர்
ஏற்றவழி எமக்கெல்லாம் காட்டி நின்ற எம் தலைவர்.....
சாற்றுப்புகழ் மனுவேற்பிள்ளை அந்தோனிப்பிள்ளை அவர்களை நாம்
ஊற்றெடுக்கும் உள் உணர்வால் மாதமொன்றில் நினைவு கூர்வோம்.

பிரதானவீதி
யாழ்ப்பாணம்

எங்கள் குடும்பத் தலைவரின்
பிரிவால் துயருற்று அவரை நினைவுகூரும்
குடும்பத்தினர்.
077 959 7158

(cs.53259) (N.1)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org